முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.7/2020**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 04.11.2025 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி Selvi.S.Padmavathi,M.L., அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| தேதி | 04.11.2025 | சாட்சி | வா.சா.1 |
|---|---|---|---|
| பெயர் | வனஜா | வயது.. | 51 |
| கணவர் பெயர்.. | பாண்டியன் | கிராமம்.. | சிதம்பரம் |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 1,2 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை ...**

1. எதற்காக என்னை மீண்டும் விசாரிக்க அழைத்திருக்கிறார்கள் என்றால் நெடுஞ்சாலைத்துறை 2,3 முறை எனது இடத்தை எடுத்திருக்கிறார்கள் ஆனால் compensation தொகையை 1,3 பிரதிவாதிகளான ஆனந்தன், ராஜசேகர் வாங்கி கொண்டார்கள். நானும் எனது அண்ணனும் தனி தனியாக இடம் பணம் செலுத்தி அளந்து பார்த்து தான் வாங்கினோம். மொத்தமாக இடம் வாங்கி மொத்தமாக வாய்க்கால் உட்பட தான் அளந்தோம். வாங்கிய பிறகு பட்டா எப்போது மாறியது என்றால் பட்டா மாறிய வருடம் ஞாபகம் இல்லை மேற்கு பக்கத்திற்கு பட்டா கேட்கும்போது நெடுஞ்சாலைத்துறை இடத்தை எடுத்துவிட்டதாக கூறிவிட்டார்கள். எந்த வருடம் நிலம் வாங்கினேன் என்றால் 1994 இல். நெடுஞ்சாலைத்துறை எப்போது இடத்தை எடுத்துக்கொண்டார்கள் என்றால் 2007. கிழக்கு பக்கம் எப்போது வாங்கினோம் என்றால் ஞாபகம் இல்லை ரோடு எடுப்பதற்கு முன்பு வரை கூட்டு பட்டாவாக தமிழரசி பெயரிலும் இருந்தது.

2. வா.சா.ஆ.18 ஆவணம் 03.04.2018 தேதியிட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.19 1 ம் பிரதிவாதி பெயரில் தான் இருக்கிறது என்றால் சரிதான். வழக்கு சொத்தை தமிழரசியிடம் வாங்கியதால் வழக்கை தமிழரசி பெயரில் தான் தாக்கல் செய்திருக்கவேண்டும் என்றால் பணத்தை தமிழரசி வாங்கவில்லை, பணம் வாங்கிய பிறகு 2018 ற்கு பிறகு 97 செண்டிற்கு 1 ம் பிரதிவாதி பட்டா வாங்கிக்கொண்டார். நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யகோரி வழக்கில் கேட்டேனா என்றால் வழக்கறிஞருக்கு தான் தெரியும். பட்டாவின் படி எனக்கு தற்போது எவ்வளவு இடம் இருக்கிறது என்று தெரியவில்லை. 1.36 செண்டில் என்னுடை

57 செண்ட் -யை நெடுஞ்சாலைத்துறையினர் எடுத்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். மீதம் 77 செண்டிற்கு எனது பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். நெடுஞ்சாலைத்துறையில் நான் சென்று 1ம் பிரதிவாதி பெயரில் பணம் போட்டது சம்மந்தமாக கேட்ட போது பஞ்சாயத்து பேசி கையெழுத்து வாங்கிக்கொண்டார்கள். அப்போது அண்ணனும், அப்பாவும் எனக்கு பணம் கொடுப்பதாக எழுதிக்கொடுத்தார்கள். அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேன்.

3. தற்போது தாக்கல் செய்திருக்கும் ஆவணங்கள் அவசியமற்றவை என்றாலும், நீதிமன்ற நேரத்தை வீனடிக்கிறேன் என்றாலும் எதிர் மனுதாருக்கு மனஉளச்சல் ஏற்படுகிறது என்றாலும் சரியல்ல. ஏற்கனவே நெடுஞ்சாலைத்துறையிலும், வருவாய்த்துறையிலும் ஆணவங்களின் படி 1 ஏக்கர் 33 செண்ட் மட்டுமே உள்ளதாக கூறி நான் சொல்லும் படி 1.36 செண்ட் பூமியில் இடம் இல்லை என்று எனது மனுவை தள்ளுபடி செய்துவிட்டார் கள் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு உண்மையில் இடம் குறைவாக உள்ளது என்றால் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து அளவீடு செய்து உண்மையை காண்பித்திருப்பேன் என்று சொன்னால் அதற்காக தான் நீதிமன்றத்திற்கு வந்திருக்கிறேன். 1ம் பிரதிவாதி அவருக்கான இடத்தை தான் அனுபவித்து வருகிறார் என்றாலும் அவருடைய இடத்தை அபகரிக்கும் நோக்கத்தோடு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல. வாய்கால் 8 செண்ட், 3 செண்ட் இடம் தற்போது எனது பாதுகாப்பில் தான் வைத்திருக்கிறேன்.

**சாட்சி விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை இல்லை.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-S.Padmavathi,
Principal District Munsif
Chidambaram.